திருவாரூர் போக்குவரத்துக் கிளை பணிமனையில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்திடுவீர் ! திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டு மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கிடுவீர்! கமுகக்குடி ஊராட்சியில் நெல் சேமிப்புக் கிடங்கு கட்ட வேண்டும்! வாளவாய்க்கால் முதல்

திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச்சாலையாக அகலப்படுத்துவீர்!

சட்டப்பேரவையில் - பூண்டி கே.கலைவாணன் பேச்சு!

சென்னை, ஏப். 5-

சட்டப்பேரவையில் மானியக் கோரிக்கைகள் மீதான விவாதத்தில் கலந்து கொண்டு பேசிய திருவாரூர் தொகுதி கழக உறுப்பினர் பூண்டி கே.கலைவாணன், "திருவாரூர் போக்குவரத்து கிளை பணிமனையில் சிமெண்ட் கான்கிரீட் தளம் அமைத்திடுவீர் ! திருவாரூரை தலைமையிடமாகக் கொண்டு மத்திய கூட்டுறவு வங்கி தொடங்கிடுவீர் ! கமுகக்குடி ஊராட்சியில் நெல் சேமிப்பு கிடங்கு கட்ட வேண்டும்!" என்று வேண்டுகோள் விடுத்தார்.

மேலும் "வாளவாய்க்கால் முதல் திருவாரூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்துவீர்!" என்றும் அரசுக்கு கோரிக்கை விடுத்தார்.

சட்டப்பேரவையில் பூண்டி கலைவாணன் பேசியதாவது:-

திராவிடத்தால் வாழ்கின்றோம் என்ற பெருமையுடன், திராவிடம் வெல்லும் என்ற கோட்பாட்டு உறுதிகொண்டு, திராவிட இயக்கத் தந்தை நடேசனார் உள்ளிட்ட நீதிக் கட்சி பிதாமகர்களுக்கு எனது முதல் வணக்கத்தைத் தெரிவித்து, 60 ஆண்டுகளுக்கு முன்பே-அதாவது, கைபேசி நம் கைகளில் தவழும், 60 ஆண்டுகளுக்கு முன்பே கம்பியில்லா தொலைபேசிமூலம் ஒருவரையொருவர் பார்த்து பேசிக் கொள்ளும் வாய்ப்பு வரும் என்றுரைத்த அறிவுலக ஆசான் தந்தை பெரியார் அவர்களை வணங்கி, தமிழ்நாடு என்ற பெயர் உள்ள வரை திராவிட ஆட்சிதான் என்று பெருமையோடு உரைத்த பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் மற்றும் உலகத் தமிழர்களின் ஒப்பு யர்வில்லாத் தலைவர் எம் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் துயில் கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உலக அரங்கில் ஒப்பாரும் மிக்காரும் இல்லாத ஒற்றை முதல்வராகத் திகழ்ந்து கொண்டிருக்கும் திராவிட நாயகன், உலகமே வியக்கும்வண்ணம் பிஞ்சுப் பிள்ளைகளின் பசிப்பிணியைப் போக்க காலைச் சிற்றுண்டி தந்த காலைக் கதிரவன், தமிழ் மண், மொழி, இனம் காத்த திராவிடத் தலைமகன் முதல்வர் கழகத் தலைவர் தளபதி அவர்களை வணங்குகிறேன்.

கடந்த காலங்களில் எங்கோ இருந்துகொண்டு தமிழகத்தில் சதுரங்கம் நடத்தியவர்கள், தற்போது தொகுதி மறுசீரமைப்பு என்ற பெயரில் தமிழ்நாடு மட்டுமின்றி தென் மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதியை எதிர்த்து, ஒட்டுமொத்த இந்திய அரசியல் தலைவர்கள், பிரதிநிதிகள் மற்றும் பிற மாநில முதலமைச்சர்களை ஒருங்கிணைத்து, எதிரணியினரே வியந்து அச்சப்படும் இந்தத் தருணத்தில், சோழன் நலங்கிள்ளியின் பெருமையை கோவூர்கிழார் அவர்கள் பாடிய 'வடநாட்டார் தூங்கார்' என்ற புறநானூற்று வரிகளை நினைவில் கொள்கிறேன்.

சனாதனத்தைத் தகர்க்க வந்த, தமிழ்நாட்டை சிறப்புத் திட்டங்களால் சிறக்கச் செய்து, செஸ் ஒலிம்பியாட் போட்டியை ஒரு மாத காலத்திற்குள் கட்டமைத்து நடத்தி உலகையே வியக்க வைத்த, உடன்பிறப்புகளைத் திகைக்க வைத்த, தமிழ் நாட்டை விளையாட்டுத் துறையின் தலைமையிடமாக மாற்றிய துணை முதல்வர் அன்பிற்கினிய உதயநிதி ஸ்டாலின் அவர்களை வணங்கி மகிழ்கிறேன்.

தனது சமிக்ஞைகளுக்கு உடன்படாத, சீற்றம் கொண்ட பல யானைகளை தனது அங்குசத்தின் ஆற்றலறிந்த ஒற்றை கும்கி யானையின் துணை கொண்டு, தனது ஆளுமைக்குள் கொண்டுவரும் ஆற்றல் உள்ள மாவுத்தன் எனப்படும் பாகனைப் போல், மழை, பெரு வெள்ளம், கடும் வறட்சி, பனி மூட்டம் ஆகிய இயற்கைச் சீற்றங்களை தனது அனுபவத்தால் வென்று வரும், வேளாண்மை உழவர் நலத் துறை அமைச்சர் அவர்களுக்கும், மீன்வளம் - மீனவர் நலத் துறை மற்றும் கால்நடை பராமரிப்புத் துறை, பால் மற்றும் பால் வள மேம்பாட்டுத் துறை அமைச்சர்களுக்கும், மற்றும் ஏனைய அமைச்சர் பெருமக்களுக்கும், பேரவைத் தலைவர் அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து க்கொள்கிறேன்.

திருவாரூர் மாவட்டத்திலுள்ள கழக முன்னோடிகள், நிர்வாகிகள், தோழமை இயக்கத்தைச் சார்ந்த அனைவருக்கும் மற்றும் எனது தொகுதி மக்கள் அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றி கலந்த வணக்கங்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வேளாண்மை -உழவர் நலத் துறை, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் துறை மானியக் கோரிக்கைகளில் உரையாற்ற எனக்கு வாய்ப்பளித்த முதல்வர் அவர்களுக்கும், துறை சார்ந்த அமைச்சர்களுக்கும் மீண்டும் ஒருமுறை எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஊரகப் பகுதிகளில் வாழும் அடித்தட்டு மக்களின் வாழ்வியலே அங்கக வேளாண்மை என்பதை நன்கு அறிந்ததே நமது திராவிட மாடல் அரசு. வேளாண்மைக்கென தனி நிதிநிலை அறிக்கையை வழங்கி, அறிவிப்போடு மட்டுமல்லாமல் அங்கக வேளாண்மையையும் தொடர்ந்து செயல்படுத்தியதன் பயனால், தற்போது, தமிழ்நாடு அகில இந்திய அளவில் கேழ்வரகு உற்பத்தியில் முதல் இடத்திலும், மக்காச்சோளம், எண்ணெய் வித்துக்கள், கரும்பு ஆகியவற்றில் இரண்டாம் இடத்திலும், நிலக்கடலை, குறுதானியங்கள் உற்பத்தித் திறனில் மூன்றாம் இடத்திலும் உள்ளது என்பதை இம்மாமன்றம் மட்டுமின்றி அனைத்துத் தரப்பு மக்களும் அறிவர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 'மண்ணுயிர் காத்து மன்னுயிர் காப்போம்' திட்டம், இயற்கை வேளாண்மையைப் பரவலாக்கம் செய்து நஞ்சில்லா விளைபொருட்களை விளைவித்து வரும் நமது திராவிட மாடல் அரசு, பெருகிவரும் நோய்களில் இருந்து மக்களைத் தற்காத்துக் கொள்ள ஊட்டச் சத்துக்கள் நிறைந்த காய்கறிகள், பழங்கள், பயறு வகைகள் மற்றும் சிறுதானியங்களின் உற்பத்தியை அதிகரிக்கும் விதமாகவும், விவசாயிகளின் வருமானத்தை உயர்த்தும் விதமாகவும், தமிழ்நாட்டு மக்களின் உடல் நலனைக் கருத்தில் கொண்டும் "ஊட்டச்சத்து வேளாண்மை இயக்கம்" என்ற ஒரு புதிய திட்டத்தைத் தந்த முதல்வர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இயற்கை விவசாயத்தின் மூலம் விளைவிக்கும் நஞ்சில்லா விளைப்பொருட்களை பள்ளிகளில் வழங்கப்படும் காலை உணவுத் திட்டம், மதிய உணவுத் திட்டம் ஆகியவற்றிலும், மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வரும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் உணவுகளிலும் வழங்கி, இயற்கை விவசாயிகளை ஊக்குவிப்பதோடு, கல்வி பயிலும் மாணவச் செல்வங்களுக்கும், சிகிச்சை பெறும் நோயாளிகளுக்கும் நஞ்சில்லா சத்தான உணவுகளை வழங்கிட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வேண்டுகோள் வைக்கிறேன்.

குறுவை சாகுபடி

கடந்த ஆண்டு குறுவைப் பருவத்தை பரிந்துரைக்கவில்லை; ஊக்கப்படுத்தவுமில்லை. மேட்டூர் அணையில் நீர் இல்லையெனினும், ஆழ்குழாய் கிணறு வாயிலாக விவசாயம் செய்யும் விவசாயிகள் பாதிக்கக்கூடாது என்ற உணர்வோடு அவர்களுக்கு குறுவைத் தொகுப்பை வழங்கியவர் நமது முதல்வர் அவர்கள்.

"நல்லார் ஒருவர் உளரேல் அவர்பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை"

என்ற வள்ளுவரின் வாக்கிற்கிணங்க, திராவிட மாடல் ஆட்சி நடத்திக் கொண்டிருக்கும் நல்லவர் முதல்வர் அவர்களுடைய ஆட்சி நடைபெறும் இந்தத் தமிழகத்தில் மேட்டூர் அணையிலிருந்து ஆறுகளின் வாயிலாக விவசாயத்திற்குத் தண்ணீர் கிடைக்கப்பெற வில்லை என்றாலும், கடந்த ஆண்டும் 15 நாட்களுக்கொருமுறை மழை பெய்து, குறுவை சாகுபடியை நல்ல முறையில் பெற்றுக் கொடுத்தது இயற்கை என்பதை பெருமையோடு பதிவு செய்கிறேன்.

தமிழ் இறைவன் வள்ளுவன் அவர்களைப் பற்றிக் குறிப்பிடும்பொழுது இதைக் கூறுவார்கள்; வள்ளுவரின் துணைவியார் வாசுகி அவர்கள், வள்ளுவருக்கு உணவு பரிமாறும்போது, உணவுப் பொருட்களோடு வெண்சங்கில் தண்ணீரையும், ஒரு ஊசியையும் கொண்டு வந்து அவர் அருகில் வைப்பார்களாம். அவர், உணவருந்தும் போது சிந்தும் ஒரு சோற்றுப் பருக்கையைக்கூட வீணடிக்கக் கூடாது என்ற உணர்வோடு, சிந்தும் ஒரு பருக்கையையும் ஊசி முனையால் எடுத்து, வெண் சங்கில் உள்ள நீரில் கழுவி, தான் உண்ணும் உணவோடு அதைச் சேர்த்து உண்ணும் வழக்கத்தைக் கொண்டவர். அந்த வள்ளுவனின் வாழ்வியல் நெறிமுறையை கிராமப்புறங்களிலுள்ள ஏழை விவசாயிகளும், வேளாண் பெருங்குடி மக்களும் இன்றளவும் தொடர்ந்து பின்பற்றிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைப் பெருமையோடு பதிவு செய்கிறேன். இது 60 ஆண்டுகளுக்கு முன்பு கிராமப்புறங்களில் வாழ்ந்த மாமன்ற உறுப்பினர்கள் மட்டுமின்றி அனைவரும் அறிந்த ஒன்றாகும்.

கிராமப்புறங்களில் கோடைக் காலங்களில் சுமார் 10 முதல் 15 நாட்கள் வரை திருவிழாக்கள் நடைபெறும். அப்போது, ஒவ்வொரு வீட்டிற்கும் வீடு கொள்ளாத அளவிற்கு விருந்தினர்கள் வருகைபுரிவதுண்டு. அவ்வாறு வருகை தரும்போது, அவர்கள் உண்டு, உறங்குவதற்கு வாசலின் வெளிப்பகுதியில் மண்ணால் ஒரு திண்ணை போன்று அமைத்து, அதை பசுஞ்சாணத்தால் மெழுகி, தீத்துக்கல் எனப்படும் கூழாங்கற்களால் செப்பனிட்டு, அதில் வருகைபுரியும் விருந்தினர்கள், உறவினர்கள் உறங்குவது மாத்திரமல்லாமல், இரவு உணவை அதுபோன்ற வெளிமுற்றத்தில் உட்கார்ந்து, நிலவொளியில் உண்ணுவது என்பது கிராமப்புறங்களிலுள்ள வழக்கமாகும். அப்போது, அடுத்தடுத்த அண்டை வீடுகளிலிருந்து, அதாவது ஒரு வீட்டிலிருந்து மற்றொரு வீட்டிற்கு திட்டாணி என்று சொல்லப்படும் உணவு உண்ணப்படும் வெளிமுற்றத்தில் உணவுகள் பகிர்ந்து கொள்ளப்படும் என்பதை பெருமையோடு பதிவு செய்கிறேன். இதை எதற்காகக் குறிப்பிடுகிறேன் என்றால், கிராமப்புறங்களில் இரவு நேரங்களில் சாணத்தால் மெழுகிய அந்த மண்ணாலான வெளிமுற்றத்தில் அமர்ந்து உணவருந்தும் ஒரு சிறு பிள்ளைகூட ஒரு பருக்கையை சிந்திவிட்டால், உறவினர்கள் அதை எடுத்து, உணவில் போட்டுக்கொள்ளச் சொல்லி கற்றுக் கொடுப்பார்கள். இந்த வாழ்வியல் நெறிமுறையைக் கற்றுக் கொடுத்தது தமிழினம். அதேநேரத்தில், வெளிநாடுகளில் வீணாகும் உணவுகளை சேகரித்து உணவற்றவர்களுக்கு வழங்குவதை மனிதநேயம் என்று பெருமையோடு கைப்பேசிகளில் பகிர்ந்து கொண்டிருக்கும் இந்தச் சூழலில், ஒரு பருக்கையைக்கூட வீணாக்கக் கூடாது என்று சொல்லிக் கொடுத்தது தமிழினம்.

நம்முடைய மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் வீரபாண்டியக் கட்டபொம்மன் என்ற திரைப்படத்தில் ஒரு வசனம் சொல்லியிருப்பார்; கற்றுக் கொடுப்பது தமிழினம், நீர் கற்றுக் கொடுக்க நினைப்பது அறிவீனம் என்று மாற்றானுக்கு உரைத்திருப்பார்.

அதுபோல, இன்று எங்கோ உள்ளவர்கள் 90 ஆண்டுகளைக் கடந்தும் துருப்பிடித்த ஆயுதமான இந்தியைக் கொண்டு வந்து தமிழர்களை அறிவுகூர்மை செய்வதாகச் சொல்லிவரும் இந்தக் காலக்கட்டத்தில், அவற்றை முற்றிலுமாக முறியடித்த நம்முடைய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

வெண்மைப் புரட்சி

வெண்மைப் புரட்சியை ஏற்படுத்த வேண்டுமென்ற எண்ணத்தோடு செயல்பட்டுக் கொண்டிருக்கும் வெள்ளை உள்ளம் கொண்ட நம்முடைய தமிழக முதல்வர் அவர்கள், பால் உற்பத்தியாளர்கள் இல்லங்களில் மண்ணின் மைந்தர் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் 1989 ஆம் ஆண்டு ஏழை பெண்களுக்கு இலவச திருமண உதவித் திட்டத்தை தந்த கலைஞர் அவர்களின் வழித் தோன்றலான தமிழக முதல்வர் அவர்கள், பால் உற்பத்தியாளர் குடும்பத்தில் உள்ள பெண்களுக்கு 30,000 ரூபாயாக இருந்த திருமண உதவித் தொகையை 60,000 ரூபாயாக உயர்த்தியும், அவர்கள் வீட்டிலுள்ள பிள்ளைகளுக்கு 25,000 ரூபாயிலிருந்து 50,000 ரூபாயாக கல்வி உதவித் தொகையை உயர்த்தி வழங்கியும் விபத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இரண்டரை இலட்சமாக இருந்த காப்பீட்டுத் தொகையை 4 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்கியும் இது போல் பல எண்ணற்ற திட்டங்களைத் தந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையில் (குறுக்கீடு) ஒரு நிமிடம். தாட்கோ வங்கியின்மூலம் கடன் பெறும் ஆதி திராவிடர்களுக்கு 1 இலட்சம் ரூபாய் கடன் தொகையில் 10 சதவிகிதம் பங்குத் தொகையாகப் பிடிப்பதை துணை முதல்வர் அவர்களிடமும், துறை சார்ந்த அமைச்சரிடமும் ஒரு கோரிக்கை வைத்த தன் அடிப்படையில் ஒரு வார காலத்திற்குள் அந்தப் பங்குத் தொகையை 5 சதவிகிதமாகக் குறைத்துக் கொடுத்ததற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அது மாத்திரமல்லாமல், ஆதி திராவிட வகுப்பை சார்ந்தவர்கள், மதம் மாறியவர்களுக்கு அவர்கள் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் வருகிறார்கள் என்பதை கனிவோடு பரிசீலனை செய்து, அது மாத்திரமல்லாமல் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள விவசாய குடும்பங்களைச் சார்ந்த பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், சிறுபான்மையினர் ஆகியோருக்கும் இந்த கறவை மாடுகளுக்கான கடன்களை வழங்கி நல்ல ஒரு நிலையை பெற்றுத் தர வேண்டும் என்ற ஒரு தகவலையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

கச்சத் தீவை மீட்க வேண்டுமென்பதற்காக ஒரு வரலாற்று சிறப்புமிக்க, வரலாற்று பிழையை நீக்கக்கூடிய ஒரு தீர்மானத்தை தந்த முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதோடு, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இதுவரை 169 விசைப் படுகுகளுக்கும் 25 நாட்டுப் படகுகளுக்கும் பாதிக்கப்பட்ட மீனவ குடும்பங்களின் வாழ்வாதாரத்தை மீட்டு தரும் விதமாக ஒரு படகுக்கு கடைசியாக கொடுத்த 53 விசைப் படகுகளுக்கு ரூ.8 இலட்சம் வீதமும், 8 நாட்டுப் படகுகளுக்கு ரூ.3 இலட்சம் வீதமும் வழங்கியுள்ளார்கள். ஆரம்பத்தில் அது எப்படி இருந்தது என்றால், ரூ.5 இலட்சம், ஒன்றரை இலட்சம் என்றிருந்ததை தற்போது ரூ.8 இலட்சம், ரூ.3 இலட்சம் என உயர்த்தி வழங்கியிருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கு மீனவர்கள் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்து, வாய்ப்புக்கு நன்றி கூறி நிறைவு செய்கிறேன்.

தொகுதிக் கோரிக்கைகள்:

கொரடாச்சேரி ஒன்றியத்திற்குட்பட்ட குளிக்கரை கால்நடை பார்வை மருந்தகத்தையும், மணக்கால் கால்நடை கிளை நிலையத்தையும் கால்நடை மருந்தகமாகத் தரமுயர்த்திட வேண்டும்.

வாளவாய்க்கால் முதல் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் வரை உள்ள தேசிய நெடுஞ்சாலையை நான்கு வழிச் சாலையாக அகலப்படுத்த வேண்டும்.

திருவாரூர் பாசன வாய்காலில் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில்மட்டும் சிமெண்ட் கான்கிரிட் தரைதளம் மற்றும் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைத்திட வேண்டும்.

போக்குவரத்து கழக திருவாரூர் கிளை பணிமனையில் சிமெண்ட் கான்கிரிட் தரைதளம் அமைக்க வேண்டும்.

திருவாரூர் பகுதியில் தோழி மகளிர் விடுதி அமைக்க வேண்டும்.

கொரடாச்சேரி ஒன்றியம், கமுகக்குடி ஊராட்சியில் திருக்களம்பூர் அருள்மிகு வில்வாரண்யேஸ்வரர் சுவாமி திருக்கோவிலுக்குச் சொந்தமான புல எண் 98/3A கொண்ட இடத்தில் நெல் சேமிப்பு கிடங்கு கட்ட வேண்டும்.

கூத்தாநல்லூர் நகராட்சி, கூத்தாநல்லூர் தாலுகா அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட வேண்டும்.

மஞ்சனவாடி திருராமேஸ்வரம் அருள்மிகு ஸ்ரீ இராமநாதசுவாமி திருக்கோயில் திருக்குளத்தினை தூர்வாரியும், தடுப்புச்சுவர் மற்றும் படித்துறையும் கட்ட வேண்டும்.

திருவாருரை தலைமையிடமாகக் கொண்டு மத்திய கூட்டுறவு வங்கி துவங்க வேண்டும்.

பெரும்பண்ணையூர், புனித சூசையப்பர் தேவாலயத்தினை பழமை மாறாமல் புதுப்பிக்க வேண்டும்.

திருவாரூர் நகரில் சுற்றுலாத் துறையின்மூலம் ஹோட்டல் தமிழ்நாடு அமைக்க வேண்டும்.

திருவாரூர் மாவட்டத்தில் பெரும்பாலான புஞ்சை நிலங்கள் கோவில் நிலங்களாகவும், நீர்நிலைப் புறம்போக்காகவும் உள்ளதால் வீடு இல்லாதவர்களுக்கு தனி வீடுகள் வழங்க முடியாத சூழ்நிலையில் அடுக்குமாடி குடியிருப்புகள் கட்டித்தர வேண்டும்.

திருவாரூர் நகரில் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி அமைத்திட வேண்டும்.

திருவாரூர் கலைஞர் நகர பேருந்து நிலையம் அருகே (தாழை.மு.கருணாநிதி வணிக வளாகம் இருந்த இடத்தில்) புதிய வணிக வளாகம் கட்ட வேண்டும்.

திருவாரூர் நகராட்சி ஜீப்ளி மார்கெட் பகுதியில் புதிய வணிக வளாகம் கட்ட வேண்டும்.

திருவாரூர் நகராட்சி, நஞ்சை சாலை பழைய பேருந்து நிலையம் அமைந்திருந்த பகுதியில் புதிய வணிக வளாகம் கட்ட வேண்டும்.

திருவாரூர் நகராட்சி, திருவள்ளுவர் மார்க்கெட் பகுதியில் கடைகள் கட்ட வேண்டும்.

திருவாரூர் நகராட்சி, தெற்கு வீதி பழைய நூலகம் அமைந்துள்ள இடத்தில் புதிய வணிக வளாகம் கட்ட வேண்டும்.

கூத்தாநல்லூரில் அறிவுசார் மையம் கட்ட வேண்டும்.

கூத்தாநல்லூரில் பூப்பந்தாட்ட உள்விளையாட்டு அரங்கம் கட்ட வேண்டும்.

கொரடாச்சேரி பேரூராட்சி பழவனக்குடியில் உள்ள பெருமாளகரம் வாய்கால் தலைப்பு மதகில் பாலம் கட்ட வேண்டும்.

கொரடாச்சேரி பேரூராட்சி பகுதியில் அறிவுசார் மையம் கட்ட வேண்டும்.

கூத்தாநல்லூர் நகராட்சி அலுவலக கட்டடத்தின் முதல்தளத்தில் கட்டடம் கட்ட வேண்டும்.

திருவாரூர் ஒன்றியம், மாங்குடி உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த வேண்டும்.

வடகால்கீழகாவதுகுடி செல்லும் சாலையில் இரயில்வே சுரங்கப்பாதை அமைக்க வேண்டும்.

கூத்தாநல்லூர் வருவாய் கிராமம், பண்டுதக்குடி கிராமம், கூத்தாநல்லூர், டாக்டர் கலைஞர் மு. கருணாநிதி அரசு மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைக்க வேண்டும்.

கொரடாச்சேரி வெட்டாற்றுப்பாலம் முதல் எண்கண் வரை உள்ள வெட்டாறு தூர்வார வேண்டும்.

செவிலியர் கல்லூரியை அரசு மருத்துவக் கல்லூரி வளாகத்திலேயே அமைக்க வேண்டும்.

புதிய மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலக கட்டட பணித்தள முன் அனுமதி வழங்க வேண்டும்.

அண்ணாமரசனாற்றின் குறுக்கே உள்ள தடுப்பு சுவர் (Notch) மறுகட்டுமானம் செய்ய வேண்டும்.

திருத்தங்கூர் வாய்க்காலில் திருத்தங்கூர் மற்றும் திருநெல்லிக்காவல் கீழ்குமுழி (Syphon) மறுகட்டுமானம் செய்ய வேண்டும்.

திட்டச்சேரி B கிளாஸ் வாய்க்காலில் உள்ள தலைப்பு மதகு (Head Sluice) மறுகட்டுமானம் செய்திட வேண்டும்..

காரநாதன் தலைப்பு மதகு (Head Sluice), கீழமனலி தலைப்பு மதகு (Head Sluice) மற்றும் நடுவப்பிடாகை தலைப்பு மதகு Head Sluice மறுகட்டுமானம் செய்திட வேண்டும்.

வேப்பத்தாங்குடி, மருவத்தூர் வழியாக செல்லும் உய்ய கொண்டான் வாய்கால் கடைமடையில் உள்ள ரெகுலேட்டர் (Regulator) மற்றும் வேப்பத்தாங்குடி தடுப்பு சுவர் Notch மறுகட்டுமானம் செய்திட வேண்டும்.

செம்பனேரி தலைப்பு மதகு (Head Sluice) வடமருதூர் தலைப்பு மதகு (Head Sluice) மற்றும் செம்பனேரி வடிகால் மதகு மறுகட்டுமானம் செய்திட வேண்டும்.

கருப்பூர் வாய்க்கால் தலைப்பு மதகு Head Sluicel ஒக்கூர் வாய்கால் தலைப்பு மதகு (Head Slice) மற்றும் ஆமூர் தலைப்பு மதகு (Head Sluice) மறுகட்டுமானம் செய்திட வேண்டும்.

ஓடாச்சேரி ரெகுலேட்டர் (Regulator), மேலூர் கீழ்குமுழி (Syphan ஓடாச்சேரி கீழ்குமுழி (Syphon) மற்றும் தென்னங்குடி கீழ்குமுழி (Syphon) மறுகட்டுமானம் செய்திட வேண்டும்.

சித்தார் வாய்க்கால், சோழங்காநல்லூர் வாய்க்கால் மற்றும் தியாகராஜன்பேட்டை வாய்க்கால்களின் கரையை பலப்படுத்த வேண்டும்.

ஊர்குடி வெட்டற்றில் பிரியும் 18வது வாய்க்கால் கரையைப் பலப்படுத்த வேண்டும்.

ஓடம்போக்கியாற்றில் பிரியும் ஆணைவடபாதி வாடிகாலில் உள்ள விளமல் தடுப்பணை (Bed dam) சீரமைக்க வேண்டும்.

ஊர்குடி தடுப்பனை (Bed dam) சீரமைத்திட வேண்டும்.

பாச்சகடை வடிகால் வாய்க்காலில்உள்ள கீழ்குமுழி மறுகட்டுமானம் செய்ய வேண்டும்.

காவனூர் மற்றும் சத்திய வாடி வாய்க்காலி காவனூர் கீழ்குமுழி (Syphon) சீரமைத்திட வேண்டும்.

விளமல் Regulator கதவுகளை புதுப்பித்திட வேண்டும்.

அம்மையப்பன், இளவங்கார்குடி கிராமம், பொது வாய்க்கால் தலைப்பு மதகு (Head Sluice) மற்றும் ரெகுலேட்டர் (Regulator) உள்ள கதவுகள் புதுபித்திட வேண்டும்.

விஜயபுரம், வாளவாய்க்காலில் கரையைப் பலப்படுத்த வேண்டும்.

தேவர்கண்டநல்லூர் மற்றும் ஆணைவடபாதி கிராமம், பெருங்குடி பாசன வாய்க்கால் கரையைப் பலப்படுத்த வேண்டும். மற்றும் பெருந்தரக்குடி தலைப்பு மதகு (Head Sluice) சீரமைக்க வேண்டும்.

தப்பளாம்புலியூர் மற்றும் கீழ கூத்தங்குடி கிராமம், கல்யாணி Regulator மற்றும் மொசக்குளம் கீழ்குமுழி சீரமைக்க வேண்டும்.

கல்லிகுடி மற்றும் சுந்தரவிளாகம் கிராமம், கல்யாணி தலைப்பு மதகு (Head Sluice) மற்றும் அலிவலம் தலைப்பு மதகு (Head Sluice) புதுபித்திட வேண்டும்.

கல்லிக்குடி கிராமம், கல்லிக்குடி ரெகுலேட்டர் 3 கதவுகள் புதுப்பித்திட வேண்டும்.

தப்பளாம்புலியூர் கிராமம், கல்யாணி ரெகுலேட்டர் (Regulator) கல்யாணி தலைப்பு மதகு (Head Suice) மற்றும் சோத்திரியம் தலைப்பு மதகு (Head Sluice) கதவுகள் புதுப்பித்திட வேண்டும்.

திருவாரூர் மயிலாடுதுறை சாலையில் திருவாரூர் நாலுகால் மண்டபம் முதல் வண்டாம்பாளை வரை சாலையை அகலப்படுத்தி மேம்படுத்திட வேண்டும்.

திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் வாளவாய்க்கால் புலிவலம் கூடூர் மாங்குடி வரை சாலையை அகலப்படுத்தி மேம்படுத்திட வேண்டும்.

திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் திருநெய்பேர், மாவூர், உத்திரங்குடி வரை சாலையை அகலப்படுத்தி மேம்படுத்திட வேண்டும்.

திருவாரூர் குடவாசல் சாலையில் திருவாரூர் நகராட்சி அலுவலகத்திலிருந்து பவித்திரமாணிக்கம் வரை சாலையை அகலப்படுத்தி மேம்படுத்திட வேண்டும்.

திருவாரூர் மன்னார்குடி சாலையில் கூத்தாநல்லூர் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்திட வேண்டும்..

திருவாரூர் காக்கழனி சாலையில் அலிவலம், தப்பாளம்புலியூர் முதல் கரியாங்குடி வரை சாலையை அகலப்படுத்தி மேம்படுத்திட வேண்டும்.

கமலாபுரம் கொரடாச்சேரி சாலையில் கண்கொடுத்தவணிதம் பகுதியில் சாலையை அகலப்படுத்தி மேம்படுத்திட வேண்டும்.

திருவரூர் குடவாசல் சாலையில் மணக்கால் ஸ்ரீவாஞ்சியம் பிரிவு சாலையில், சாலையின் சந்திப்பினை மேம்படுத்திட வேண்டும்.

குளிக்கரை அம்மையப்பன் சாலையில் பெருந்தரக்குடி முதல் அம்மையப்பன் சாலையை மேம்படுத்திட வேண்டும்.

திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையில் கூடூரிலிருந்து பிரிந்து கூத்தங்குடி கிராமத்திற்கு செல்லும் சாலையை மேம்படுத்திட வேண்டும்.

திருவாரூர்ECR சாலையை இணைக்கும் திருவாரூர் திருத்துறைப்பூண்டி சாலையை இருவழிச் சாலையாக மேம்படுத்திட வேண்டும்.

சுந்தரவிளாகம், அலிவலம், தப்பளாம்புலியூர், ஆந்தகுடி வழியாக திருக்குவளை செல்லும் சாவையை இருவழிச் சாலையாக மேம்படுத்திட வேண்டும்.

அடியக்கமங்கலம், ஆண்டிப்பாளையம், சேமங்கலம் வழியாக தேவூர் இணைப்பு சாலையை அகலப்படுத்த வேண்டும்..

எண்கண் அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருத்தேர் ஓடும் நடுத்தெரு, மேலத்தெரு சாலையை அகலப்படுத்த வேண்டும்.

கொரடாச்சேரி குடவாசல் சாலையில் செல்லூரில் கட்டப்பட்டு வரும் அரசு கலைக்கல்லூரி முதல் செல்லூர் வரை போக்குவரத்து நெரிசல் மிகுந்த சாலை பகுதியினை அகலப்படுத்தி, மேம்படுத்தி தடுப்புச்சுவர் கட்ட வேண்டும்.

கொரடாச்சேரி EB அலுவலகம் முதல் கப்பலுடையான் வரை உள்ள சாலையினை மேம்படுத்த வேண்டும்.

கொரடாச்சேரி முதல் கமுகுடி வரையுள்ள சாலை பகுதியினை மேம்பாடு செய்ய வேண்டும்.

திருமதிக்குன்னம் ரயில்வே கேட் சாலை பகுதியினை மேம்பாடு செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் பேசினார்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நெல்லிக்குப்பம் வி. கிருஷ்ணமூர்த்தி
ஏப்ரல் 5 (2005)

திராவிட இயக்கத்தின் மூத்த முன்னோடிகளில் ஒருவர்.

தமிழக சட்டமன்ற உறுப்பினராக மூன்று முறை தேர்ந்தெடுக்கப்பட்டவர். ஒரு முறை நாடாளுமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றியவர்.

"பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்தில் அக்கறை கொண்டு தொடர்ந்து குரல் கொடுத்து வந்தவர்" என தலைவர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.